ந.க.எண். 1765/08/இ2

பேரூராட்சிகள் ஆணையரகம்,
குறளகம், சென்னை 108.

நாள். 27.09.2006

**சுற்றறிக்கை**

பொருள்– பேரூராட்சிகள் நிர்வாகம் – தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிகளுக்கான புத்தாக்க பயிற்சி அளித்தல் – தொடர்பாக

பேரூராட்சிகளின் தலைவர், துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு இவ்வாணையரகத்தால் வெளியிடப்பட்ட கையேடு 2006ல் வழங்கப்பட்டுள்ளது. பெரும்பாலான மண்டலங்களில் பேரூராட்சி உறுப்பினர்களுக்கு மன்ற செயல்பாடு குறித்து பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளது. இருப்பினும் தற்போது மன்ற உறுப்பினர்கள் பதவியேற் ஓராண்டுக்கு மேல் ஆனதாலும் மற்றும் கடந்த 21.1.08ல் மாண்புமிகு கதர்வாரியத்துறை அமைச்சரின் ஆணைக்கிணங்க நீலகிரி மாவட்டத்திலுள்ள பேரூராட்சிகளின் தலைவர். துணைத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அனைவருக்கும் மன்ற செயல்பாடுகள், பேரூராட்சியின் சேவைகளான குடிநீர் வழங்கல், தெருவிளக்குகள், திடக்கழிவு மேலாண்மை, பொதுச்சுகாதாரம் போன்றவைகள் குறித்தும் விரிவான பயிற்சி அளிக்கப்பட்டது போல, அனைத்து பேரூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கும் புத்தாக்க பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

மேலும். பேரூராட்சி நிர்வாகத்தில் செயல் அலுவலர்களுக்கும் மன்ற உறுப்பினர்களுக்கும் இடையே சமுகமான உறவு இல்லாததால், தேவையற்ற நிர்வாகச் சிக்கல்கள் தொடர்ந்தவண்ணம் உள்ளது. எனவே இப்போக்கினை தவிர்க்கும் பொருட்டு அனைத்து மண்டலங்களிலும், பேரூராட்சி மன்ற தலைவர் , துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கேற்ப, பயிற்சித் திட்டம் வகுக்கப்பட வேண்டும். பயிற்சி வகுப்பிற்கு சம்மந்தப்பட்ட மண்டல உதவி இயக்குநர்கள் பேரூராட்சி நிர்வாகத்தோடு தொடர்புடைய நெடுஞ்சாலை துறை/மின்வாரியம்/பொதுச்சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து துறை, சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம்/ நகர ஊரமைப்புத் துறை மற்றும் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை அலுவலர், இவ்வியக்கக ஆய்வு அலுவலர் மூலம் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

இப்பயிற்சி வகுப்பில் பின்வரும் தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

1. பேரூராட்சி மன்ற செயல்பாடு
2. மன்ற தலைவரின் கடமைகளும் பொறுப்புகளும்
3. துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பங்கு
4. செயல் அலுவலரின் கடமைகளும் பொறுப்புகளும்
5. மன்ற கூட்டங்கள் நடத்தப்படும் முறை கால இடைவெளிகள்
6. மன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து மன்ற கூட்டங்களில் கலந்து கொள்ளவில்லை எனில் தண்டனைகள்
7. திறந்தவெளி ஒப்பந்த புள்ளி விதிகள் 2000
8. வரவு செலவு திட்டம்–நிதி மேலாண்மை
9. திட்ட அனுமதி/கட்டிட உரிமம்/மனைபிரிவு அனுமதி/ வரன் முறை திட்டம்
10. பேரூராட்சிகளில் செயல்படுத்தப்படும் திட்டங்களின் வழிகாட்டு நெறிமுறைகள்
11. பெண் பிரதிநிதிகளின் அதிகாரங்களை உறவினர்கள் தவறாக பயன்படுத்துவது
12. தெரு விளக்குகள் பராமரிப்பு – மின் சிக்கனம்
13. குடிநீர் வழங்கல் – அனுமதியற்ற குடிநீர் இணைப்புகள் இல்லாத நிலை உருவாக்குதல் – கட்டணங்கள் உயர்த்துதல்

14. உரிமங்கள் – கட்டணங்கள் மாற்றி நிர்ணயிக்க கோருதல்.

15. சொத்துவரி / காலி மனைவரி நிர்ணயம்.

16. சாலைகள் பராமரிப்பு – சாலைகள் வேறு பணிக்காக வெட்டப்படும் போது மேற்கொள்ளும் நடவடிக்கை.

17. வருமானம் தரத்தக்க மரங்கள்/ கட்டிடங்கள்/நிலங்களை ஆண்டு குத்தகைக்கு விடப்படுதல் – குறிப்பாக மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை உயர்த்தி நிர்ணயித்தல் மற்றும் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை 15% உயர்த்தி நிர்ணயித்து 9 ஆண்டுகள் வரை தொடர்ந்து அனுமதிக்கலாம் – வெளிச்சந்தை விலையோடு ஒப்பிட்டு திருத்தி மறு நிர்ணயம் செய்யலாம்.

18. தூய்மையான/ பசுமையான நகரமாக மாற்றுதல்–நடவடிக்கைகள்.

19. முதலுதவி, எச்.ஐ.வி/ எய்ட்ஸ் / சிக்குன்குன்யா/ மலேரியா போன்ற நோய் தடுப்பு முறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

எனவே , அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள் தங்கள் மண்டலங்களில் பேரூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கேற்ப, பயிற்சித் திட்டம் தயாரிக்கப்பட்டு புத்தாக்கப் பயிற்சி அளிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இச்சுற்றறிக்கை கிடைக்கப் பெற்றமைக்கு உடன் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

**ஒம்/– கே. கோபால்**
ஆணையர்

பெறுநர்

அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள்.